# சமூக உதவி பற்றிய துண்டுப்பிரசுரம்

வாழ்வதற்கு போதுமான பணம் இல்லாதவர்களுக்கு (நிதி நெருக்கடி), சுவிட்சர்லாந்தில் <<சமூக உதவி>> பெற உரிமை உண்டு.

சமூக உதவி பெற நீங்கள் வாழும் இடத்தில் உள்ள சமூக அலுவலகம் பொறுப்பு ஆகும்.

சமூக நல அலுவலகம் (Sozialamt) உங்களுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனை வழங்கவும் மற்றும் பொருளாதார (பணம், வாடகை, மருத்துவ காப்பீடு...) ரீதியாகவும் கட்டாயம் உதவ வேண்டும். நீங்கள் எவ்வளவு பெறுகிறீர்கள் என்பதை சமூக நல அலுவலகம் சரிபார்க்கும்.

நீங்கள் பெறும் சமூக உதவி நலன்கள் எதற்காக மற்றும் எவ்வளவு என்று என்பதைப் புரிந்துகொள்ள எப்போதும் முயற்சிக்கவும்.

சமூக உதவிக்கான பணம் வரிப் பணத்திலிருந்து செலுத்தப்படுகிறது.

**சமூக நல அலுவலகம்** (Sozialamt): சமூக நல அலுவலக ஊழியர்கள் எல்லா முடிவுகளையும் எடுக்க முடியாது **சமூக நல பாதுகாப்பு ஆணையம்** (Fürsorgebehörde: இது சமூக நல அலுவலகம் மேல் உள்ளது. இந்த ஆணையத்) 5-9 பேர் (தலைவர் ஒரு நகராட்சி பொறுப்பாளர் (Gemeinderat). அவர்கள் முக்கியமான முடிவுகளை எடுப்பார்கள்.

சமூக உதவி பெறும் எவரும், வசிக்கும் நகராட்சிக்கு (Gemeinde) கடனாளியாகிறார்கள், சில நிபந்தனைகளுடன் அது கட்டாயம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். (கீழே பார்க்கவும்).

நீங்கள் சமூக உதவியைப் பெறும்போது, உங்களுக்கு உரிமைகளும் கடமைகளும் உள்ளன.

“உரிமை” என்பதன் பொருள்: நீங்கள் அதை **செய்ய முடியும்**

“கடமை” என்றால்: நீங்கள் அதை கட்டாயம் **செய்ய வேண்டும்**

சமூக உதவியின் நோக்கம், நீங்கள் மீண்டும் (நிதி) சுயாதீனமாக ஆக வேண்டும் என்பதே.

**இவை உங்கள் கடமைகள்:**

நீங்கள் செய்ய வேண்டியவை இங்கே  கொடுக்கப்பட்டுள்ளன.

**தகவல்களை வழங்குதல்**

நீங்கள் சமூக உதவியைப் பெற தகுதியானவரா என்பதை சமூக நல பாதுகாப்பு ஆணையம் (Fürsorgebehörde) உங்கள் நிதியை சரிபார்க்கு .

எனவே சமூக நல அலுவலகத்திற்கு (Sozialamt) தேவையான முக்கிய தகவல்களை நேர்மையாக பதிலளிக்க வேண்டிய கடமை உங்களுக்கு உள்ளது.

– உங்களுக்கு ஊதியம் கிடைக்கும் போது
– நீங்கள் வேறு ஒருவரிடமிருந்து பணம் பெறும்போது
– நீங்கள் ஒரு புதிய கணக்கைத் திறக்கும்போது
– உங்களிடம் (தாயகத்தில்) எவ்வளவு பணம் உள்ளது
– உங்களிடம் வாகனம் இருந்தால்
– நீங்கள் எவ்வளவு வாடகை செலுத்துகிறீர்கள்
– உங்களுக்கு குழந்தைகள் இருக்கிறார்களா
– நீங்கள் திருமணமானவரா
– ...

நீங்கள் சமூக நல அலுவலகத்திற்கு பின்வரும் ஆவணங்களை (காகித வடிவில்) கொடுக்க வேண்டும்:

– வங்கிக் கணக்கு அறிக்கை (ஒவ்வொரு மாதமும்)
– ஊதியம் (ஒவ்வொரு மாதமும்)
– வாடகை ஒப்பந்தம்
– நீதிமன்றத்தின் கடிதங்கள்
– ...

உங்கள் நிதிகளில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அதை நீங்கள் உடனடியாக சமூக நல அலுவலகத்திடம் தெரிவிக்க வேண்டும்.

சமூக நல அலுவலகம் நீங்கள் என்ன கொடுக்க வேண்டும் அல்லது என்ன இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவிக்கும்.

**பங்கேற்பு**

நீங்கள் சமூக நல அலுவலகத்திற்கு உதவ வேண்டும்: உங்கள் வாழ்க்கையில் ஏதாவது மாற்றங்கள் (தனிப்பட்ட முறையில் அல்லது நிதி) இருந்தால், நீங்கள் உடனடியாக சமூக நல அலுவலகத்திற்கு சொல்ல வேண்டும்.

– புதிய / வேறு வேலை
– வேலை இழப்பு/ராஜினாமா
– புதிய ஊதியங்கள்
– திருமணம்
– கர்ப்பம் தரித்தல்
– புதிய / வேறு குடியிருப்பு
– ...

நீங்கள் சமூக நல அலுவலகத்திற்கு உதவாவிட்டால், இப்படி நிகழலாம்

நீங்கள் தவறான தகவல்களையோ அல்லது எல்லா தகவல்களையும் வழங்கா விட்டால், சமூக உதவி குறைக்கப்படலாம், அதாவது உங்களுக்கு பணம் குறைத்து வழங்கப்படும் அல்லது மறுக்கப்படும்.

அல்லது நீங்கள் ஜெர்மன் மொழியைக் கற்க முயற்சிக்கவில்லை என்றாலோ, ஒரு தொழிற் பயிற்சி பெற அல்லது ஒரு வேலை தேட முயற்சிக்கவில்லை என்றாலோ, அவ்வாறு நீங்கள் செய்யும் நிலையில் இருந்தும் கூட....

முதலில் உங்களுக்கு சமூக நல பாதுகாப்பு ஆணையத்திலிருந்து (Gemeinde) ஒரு கடிதம் (மறுப்பு தெரிவிக்கும் அறிவிப்பு - anfechtbare Verfügung)
வரும். இந்த கடிதத்தில் உங்களுக்கு உடன்பாடு இல்லை என்றால், மனு கொடுக்க உங்களுக்கு உரிமை உண்டு.

<<மறுப்பு தெரிவிக்கும் அறிவிப்பு>>
anfechtbare Verfügung: இந்த கடிதத்தில் சமூக நல பாதுகாப்பு ஆணையத்தின் முடிவுகளும் அதன் காரணங்களும் தெரிவித்திருப்பர்கள். இக்கடிதத்துக்கு மறுப்பு தெரிவிக்கலாம்.

➔ இது குறித்து மேலும் வாசிக்க
«கேட்கும் உரிமை» (rechtliches Gehör) பிரிவு

உறவினர்களிடமிருந்து ஆதரவு

உங்கள் குடும்பத்திடம் (பெற்றோர், வயது வந்த குழந்தைகள்) நிறைய பணம் இருந்தால், அவர்கள் நீங்கள் வாழ உங்களுக்கு பணம் கொடுக்க வேண்டும். அந்த நிலையில் உங்களுக்கு சமூக உதவி மறுக்கப்படும்.
நீங்கள் திருமணமானவராக இருந்தால், உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் உங்கள் முன்னாள் வாழ்க்கைத்துணை பணம் கொடுக்க வேண்டியிருக்கலாம்.

சமூக நல அலுவலகம் இதைச் சரிபார்த்து, உங்கள் உறவினர்கள் உங்களுக்கு பணம் செலுத்த வேண்டுமா அல்லது உங்களுக்கு சமூக உதவி கிடைக்குமா என்று முடிவு செய்யும்.

பணத்தைத் திரும்பச் செலுத்தல்

சமூக உதவிப் பணம் என்பது ஒரு பரிசு அல்ல. இந்த காரணத்திற்காக, நீங்கள் பெற்ற சமூக உதவி பணத்தை நகராட்சிக்கு திருப்பித் தர வேண்டும்:

– நிறைய பணம் கிடைத்தால் (உதாரணமாக லாட்டரி, பரம்பரை சொத்து)
– நீங்கள் நிறைய பணம் சம்பாதித்தால்
– நீங்கள் தவறான தகவல்களைக் கொடுத்தால் (உதாரணமாக புதிய ஊதியம்)
– எந்த தகவலும் கொடுக்கவிட்டால் (உதாரணமாக கணக்கை சரியாக, காட்டா
– விட்டால்)
– நீங்கள் தகவல்களை வழங்குவதற்கும் ஒத்துழைக்கும் கடமையை மீறுவதற்கும்
- சமூக உதவி பணத்தை ஆடம்பர செலவிடுதல் (உதாரணத்திற்கு வாடகை செலுத்துவதற்கு பதிலாக புதிய டிவியை வாங்குவது)

பணத்தை முழு குடும்பத்திற்கும் (வாழ்க்கைத்துணை மற்றும் குழந்தைகள்) திருப்பித் தர வேண்டும்.

நீங்கள் ஒரு காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பணத்துக்காக காத்திருக்கும் சமயத்தில் சமூக நல அமைப்பிடமிருந்து (Gemeinde) முன்கூட்டியே பணம் வழங்கப்பட்டிருந்தால், காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பணத்தைப் பெற்றவுடன் இந்த தொகையை நீங்கள் திருப்பிச் செலுத்த வேண்டும்.

நீங்கள் கீழே உள்ள காரணங்களுக்காக பணத்தை திருப்பிச் செலுத்த

வேண்டியதில்லை:

- சிறு வயதினராக (18 வயது வரை) சமூக உதவியைப் பெற்றவராக இருந்தால்
- பயிற்சிப்படிப்பு காலத்தில் சமூக உதவியைப் பெற்றவராக இருந்தால்
- கடைசியாக 20 ஆண்டுகளுக்கு முன்பு சமூக உதவி பெற்றவராக இருந்தால்

நீங்கள் சமூக உதவியை கட்டாயம் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும் போது, சமூக நல அலுவலகம் அதனை உங்களுக்குத் தெரிவிக்கும்.

இவை உங்கள் உரிமைகள்:

நீங்கள் விரும்பினால் பின்வரும் முடிவுகளை எடுக்கலாம்.

<u>சட்ட உரிமை மற்றும் கையாளும் உரிமை</u>
.
நீங்கள் சமூக உதவியைப் பெற்றாலும், நீங்கள் சட்டரீதியாக செயல் படலாம் அதாவது

- ஒப்பந்தங்களை முடிக்க உங்களுக்கு அனுமதி உண்டு
- உயில் எழுத அனுமதி உண்டு
- நீங்கள் ஒரு வழக்கு தொடரலாம்
- உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பு உரிமை உங்களிடம் உள்ளது
- ...

<u>கோப்புகளை அணுகுதல்</u>

நகராட்சி உங்களைப் பற்றிய அனைத்து ஆவணங்களையும் தகவல்களையும் சேகரிக்கிறது. நீங்கள் விரும்பினால் இந்த ஆவணங்களைப் பார்க்க அனுமதி உண்டு. அது உங்கள் உரிமை.

<u>கேட்கும் உரிமை (Rechtliches Gehör)</u>

உங்கள் சமூக உதவிச் சலுகைகளை ரத்து செய்ய அல்லது குறைக்க, சமூக நல பாதுகாப்பு ஆணையம் முடிவு செய்வதற்கு முன், அல்லது நீங்கள் என்ன செய்ய

வேண்டும் அல்லது பணம் செலுத்த வேண்டும் என்று உங்களுக்கு அறிவிக்கு முன், அது உங்களுக்கு "கேட்கும் உரிமையை" வழங்க வேண்டும். அதாவது நீங்கள் நகராட்சியிடம் (சமூக நல பாதுகாப்பு ஆணையம் Fürsorgebehörde) கருத்து தெரிவிக்கலாம், அவர்கள் தீர்மானிப்பதற்கு முன் எல்லாவற்றையும் கவனமாக சரிபார்க்க வேண்டும்.

சமூக நல பாதுகாப்பு ஆணையத்தின் (நகராட்சி - Gemeinde) ஒரு முடிவுக்கு நீங்கள் உடன்படவில்லை என்றால்,சமூக நல அலுவலகத்திற்குச் (Sozialamt) சென்று என்ன முடிவு செய்யப்பட்டது, மற்றும் ஏன் என்று கேளுங்கள். அங்கே உங்களுக்கு உதவி கிடைக்கவில்லையென்றால் நீங்கள் அறிவிப்புக்கு எதிர்ப்பு (anfechtbare Verfügung) தெரிவியுங்கள். இக்கடிதம் புகார் செய்ய தேவையானது (கீழே பார்க்கவும் புகார்).

முக்கியமானது: சமூக நல பாதுகாப்பு ஆணையம் என்ன முடிவு செய்தது என்பதை நீங்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

<u>புகார்</u>

நீங்கள் சமூக நல பாதுகாப்பு ஆணையத்தின் Fürsorgebehörde (நகராட்சி Gemeinde) தீர்மானத்துடன் (முடிவு) உடன்பாடு இல்லாவிட்டால், நீங்கள் புகார் அளிக்கலாம். எச்சரிக்கை: தீர்மானத்தில் புகாருக்கான காலக்கெடு (20 நாட்கள்) உள்ளது; இதன் பொருள் உங்களுக்கு 20 நாட்கள் உள்ளன, கடிதம் கிடைத்த முதல் நாளில் இருந்து காலக்கெடு ஆரம்பம் ஆகிறது
(பதிவு தபால் மூலம் «Eingeschrieben» அல்லது உங்களுக்கு சமூக நல அலுவலகம் நேரடியாக வழங்கப்பட்ட நாளிலிருந்து) இந்த 20 நாட்கள் காலக்கேடு கடந்த பின்னர், நீங்கள் எதுவும் செய்ய முடியாது.

இப்படி புகார் அளிக்கவும்:

நீங்கள் ஒரு கடிதம் எழுதுங்கள். அந்த கடிதத்தில் இந்த முடிவுக்கு ஏன் உடன்பாடு இல்லை என்பதை விளக்குங்கள்.

இந்த முகவரிக்கு சமூக நல பாதுகாப்பு ஆணையத்தின் முடிவோடு நீங்கள் எழுதிய கடிதத்தையும் அனுப்பவும்:

Regierungsrat des Kantons Schwyz
Beschwerdedienst
Bahnhofstrasse 9
Postfach 1200
6430 Schwyz

சமூக நல அலுவலகத்தின் (Sozialamt) கடமைகள்

சமூக நல அலுவலகத்திற்கும் கட்டாய கடமைகள் உள்ளன அவை:

<u>கோரிக்கைகள்</u>

நீங்கள் சமூக நல பாதுகாப்பு ஆணையத்திற்கு Fürsorgebehörde (நகராட்சி) ஒரு விண்ணப்பத்தை அனுப்புகிறீர்கள். சமூக நல பாதுகாப்பு ஆணையம் அந்த விண்ணப்பத்தை பரிசீலிக்கும் பொறுப்பு உள்ளது. அவர்கள் ஒவ்வொரு கோரிக்கையையும் சரிபார்த்து உங்களுக்கு ஒரு பதிலைக் கொடுக்க வேண்டும். சமூக நல பாதுகாப்பு ஆணையம் பதிலளிப்பதற்கு அதிக நேரம் காத்திருக்கக்கூடாது.

<u>ரகசியத்தன்மை</u>

சமூக நல அலுவலகத்திலும் நகராட்சியில் (Gemeinde) பணிபுரியும் நபர்களிடத்திலும் உங்களை பற்றி நிறைய முக்கியமான தகவல்கள் உள்ளன. இந்த காரணத்திற்காக, ஊழியர்களுக்கு ரகசியத்தன்மையின் கடமை உள்ளது. அதாவது, அவர்கள் உங்களை பற்றிய
தகவல்களை யாருக்கும் சொல்ல/ கொடுக்க அனுமதியில்லை.

<u>எழுதப்பட்ட விளக்கம்</u>

சமூக நல பாதுகாப்பு ஆணையம் (நகராட்சி) உங்கள் கோரிக்கையை நிராகரித்தால், அதாவது எதையாவது செலுத்த விரும்பவில்லை அல்லது ஒரு பகுதி மட்டுமே செலுத்தினால் சமூக நல பாதுகாப்பு ஆணையம் எல்லாவற்றையும் சரியாக விளக்க வேண்டும் மற்றும் காரணங்களை எழுதவேண்டும். சமூக நல பாதுகாப்பு ஆணையம் உங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்க கூடிய ஒரு அறிவிப்பை காரணங்களுடன் அனுப்புவார்கள். அது அனுப்பப்படாவிட்டால் அதை நீங்கள் கேட்டு வாங்கலாம்.

<u>உதவி வழங்குதல்</u>

நீங்கள் அவசர நிலையில் இருந்தால் சமூக நல அலுவலகம் உங்களுக்கு கட்டாயம் உதவ வேண்டும். நீங்கள் உங்கள் நிலைமையை சுயமாக மேம்படுத்தலாம் அல்லது சமூக நல அலுவலகத்துடன் இணைந்து தீர்வு காணலாம்.

# உதவிக்குறிப்புகள்

முன்கூட்டியே உதவி கோரவும்.

உங்களுக்கு ஏதேனும் சிக்கல் இருந்தால் அல்லது ஏதாவது (கடிதங்கள்) புரியவில்லை என்றால், சமூக நல அலுவலகத்திற்கு உடனே செல்லவும்.

உங்களை நன்கு தயார் செய்யுங்கள்.

உங்களுக்கு சந்திப்பு இருந்தால், எல்லா ஆவணங்களையும் உங்களுடன் எடுத்துச் சென்று முன்கூட்டியே உங்களுடைய எல்லா கேள்விகளையும் ஒரு காகிதத்தில் எழுதுங்கள்.

சமூக நல அலுவலகத்துடன் ஒத்துழைக்கவும்.

சமூக நல அலுவலகம் உங்களுக்கு உதவ விரும்புகிறது; உங்களால் முடிந்தவரை ஊழியர்களுடன் இணைந்து ஒன்றாக பணியாற்றுங்கள்.

தவறான தகவலைத் தவிர்க்கவும்.

நீங்கள் நிறைய அறிக்கைகளையும் வதந்திகளையும் கேட்கிறீர்களா?

அப்படியானால் சமூக நல அலுவலகம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து, சரியான தகவல்களை பெறவும். மேலும், உங்கள் சமூக நல உதவிகளை மற்றவர்களுடன் ஒப்பிட வேண்டாம். ஒவ்வொரு வழக்கும் வேறு.

சமூக உதவியில் இருந்து உங்களை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

அதற்கு சில காலம் ஆகலாம். சிறந்த தீர்வு என்னவென்றால், ஒரு தொழிற்பயிற்சி பெறுவது, இதன் மூலம் நீங்கள் பின்னர் ஒரு நல்ல வேலை தேடலாம்.

**விளக்கம்**

எனது உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய தகவல்களைப் படித்தேன். இந்தத் தகவல்கள் எனக்கு புரிந்தது.

பெயர் மற்றும் முதல் பெயர் ..............................................................................................

இடம் மற்றும் தேதி ..............................................................................................

கையொப்பம் ..............................................................................................

# சமூக உதவிகள்



**நிலைமை டர்பான சேவைகள்**

தேவையானால்
உதாரணம் பல்
சிகிச்சைகள்



அடிப்படைத்
தேவைகள்



வீட்டு வாடகை
செலவுகள்

கூடுதல் செலவுகள்
உள்பட



அடிப்படை மருத்துவ
சேவைகள்




தேர்வு செய்யப்பட்ட அடிப்படை தேவைகளுக்கான பொருட்கள் மற்றும் சேவைகள்